01.11.2025

STC.567/2022

Pw-2 புனிதா

(மனுதாரர் ஆஜர். மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

எனது நிரூபண வாக்குமூலத்தில் எனது தகப்பனாருக்கு எந்த முறையில் எந்த தேதியில் பணம் கொடுத்தேன் என்ற விபரத்தை சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். நான் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் 3 லட்சம் கொடு உள்ள வட்டியை வாங்கிகொள் என சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். அதுபோல் எனது கணவரும் உன் தகப்பனார் தானே கொடு உள்ள வட்டியை வாங்கிக்கொள் என கூறியதின் பேரில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வட்டி எத்தனை சதவீதம் என்று சொல்லவில்லை. நான் இன்று வரை நான் கொடுத்த பணத்தை திரும்ப வாங்கவில்லை. நானும் எனது கணவரும் எங்களுடைய பணத்தை என் தந்தையிடம் கேட்டோம். தருவதாக சொல்லிவிட்டார். நான் அவ்வாறு எனது அப்பாவுக்கு பணம் கொடுக்கவில்லை என்று சொன்னாலும் எனது அப்பாவுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் என் தந்தையிடம் எதிரிக்கு எவ்வளவு வட்டியில் பணம் கொடுத்தீர்கள் என்று கேட்டேனா என்றால் கேட்டேன் எனது தந்தைக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை.** இல்லை.